[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 11

விரிவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலும் இந்தச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் பங்களிப்பு உள்ளது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதில் பெரியவர்கள் மட்டுமல்ல; சிறியவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கும் செவிசாய்த்து உடனுக்குடன் அதற்குத் தீர்வு காணக்கூடிய வகையில் நம்முடைய துறை செயல்பட்டு வருகிறது. அரசு செயல்பட்டு வருகிறது. சமீபத்தில் டிசம்பர் மாதம் 24 ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்திற்கு ஆய்விற்காகவும், சிறுகூடல்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகவும் நானும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் பெரியகருப்பன் அவர்களும் சென்றிருந்தோம். அங்கேயிருந்த 5-6 வயதுள்ள சிறுமியர் ஹாசினி, ஜெசிந்தா, எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என்று என்னை அவர்களுடைய வீட்டிற்கு அழைத்தார்கள். அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். Coffee போட்டுக் கொடுத்தார்கள். Coffee-ஐக் குடித்துவிட்டு நான் கேட்டேன் உங்களுக்கு என்ன வேண்டுமென்று, உங்களுக்கு ஏதாவது ஆசையிருந்தால் சொல்லுங்கள், நான் வாங்கித் தருகிறேன் என்று சொன்னேன். அந்த இரண்டு சிறுமியர் கேட்டது ஒன்றே ஒன்றுதான். எங்கள் சமத்துவபுரத்திற்கு நாங்களெல்லாம் விளையாடுகிற மாதிரி விளையாட்டுத்திடல் அமைத்துக் கொடுங்கள் என்று கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிறுமியர் அவர்களுக்குச் சொந்தமாக எதையும் கேட்கவில்லை. அந்த சமத்துவபுரத்திற்கு ஒட்டுமொத்தமாக ஒரு விளையாட்டுத் திடல் வேண்டுமென்று ஆசையாகக் கேட்டார்கள். அவர்கள் கோரிக்கை வைத்த அன்றைய தினமே பூங்கா அமைக்க ரூபாய் 14 இலட்சத்துக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற முறை ஆய்வுக்கு மீண்டும் சென்றிருந்தபோது, பூங்கா ready ஆகிவிட்டதா, என்று கேட்டேன். Collector, பூங்கா ready ஆகிவிட்டது என்று சொன்னார். தற்போது திறப்பு விழா காண தயாராகி வரும் அந்தப் பூங்காவை அந்தச் சிறுமிகளை வைத்தே திறக்க நடவடிக்கை எடுக்குமாறு, மாவட்டத்தின் அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் நான் அறிவுறுத்தியுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)